## நூறு நாள் வேலையே இனி இல்லை என

# கிராம மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் பா.ஜ.க. - அ.தி.மு.க.வை கண்டித்து ஆர்த்தெழுந்த காட்சி!



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சிஒன்றியம் மற்றும் மேல்மலையனூர் ஒன்றிய தி.மு.க. சார்பில்100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும்அதிமுகவை கண்டித்துநடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமைதாங்கிகண்டன உரை நிகழ்த்தினார். உடன் தோழமைக் கட்சி நிர்வாகிகள் ரங்க பூபதி, ஏ.கே.மணி , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொத்தியார் அலிமஸ்தான், ஒன்றிய செயலாளர்கள்நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன் , மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள்கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்து கண்டன கோஷமிட்டனர்.



வேலூர் வடக்கு மாவட்டம் காட்பாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு 100நாள் வேலை திட்டத்தை குழிதோண்டி புதைக்கும் ஒன்றிய பா.ஜ.க., அ.தி.மு.க.வைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கலந்து கொண்டு கண்டனபேரூரை ஆற்றினார். உடன் மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன், ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.தணிகாசலம்,கே.கருணாகரன்,சி.ரவி, மண்டல குழு தலைவர் புஷ்பலதா, வள்ளிமலை ஊராட்சி மன்ற தலைவர் வாசுகி, மற்றும் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகட்சியினர் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டை ஒருங்கிணைந்த ஒன்றிய தி.மு.க சார்பில் அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அ.தி.மு.க.வையும், கண்டித்து கூட்டணி கட்சிகளின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி தலைமையில் நடைபெற்றது இதில் ஜீ.கே.குழுமம் சந்தோஷ்காந்தி, மாவட்ட துணை செயலாளர் குமுதா குமார் ஒன்றிய செயலாளர்கள் சேஷாவெங்கட் எம்.சண்முகம், பத்மநாபன் அக்ராவரம் முருகன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி தலைமை செயற்குழு உறுப்பினர் க.சுந்தரம் நகர பேரூர் செயலாளர்கள் து.தில்லை பி.பூங்காவனம் சி.பெரியசாமி மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள் உடன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் 100 நாள் திட்டத்தின் கீழ் பணிபுரியும் பெண்கள் திரளாக பங்கேற்றனர்.



பண்ருட்டி தெற்கு ஒன்றியம்,குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியம் சார்பில்,நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் காடாம்புலியூர், நெய்வேலி ஆர்ச் கேட் பகுதிகளில் ஒன்றிய செயலாளர் சபா .இராஜேந்திரன் எம்.எல்,ஏ,. தலைமையில் ,100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் பா.ஜ.க. அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது, ஒன்றிய செயலாளர் அ. குணசேகரன் , சி.பி.எம். முத்துவேல் , காங்கிரஸ் இளஞ்செழியன், ராஜன் , வி.சி.க. மருதமுத்து, த.வா.க, சிவக்குமார், தி.க,மணிவேல்,உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டனர்.



கடலூர் கிழக்கு மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியம் சார்பில். ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில், ஒன்றிய கழக செயலாளர் வி. சிவக்குமார் தலைமையில் பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க.வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைப்பெற்றது. காங்கிரஸ் ராமச்சந்திரன், ஜனார்தனன், ராஜா, பாலகிருஷ்ணன், ம.தி.மு.க. என்.ராமலிங்கம், ஆர்டி.ஆரசு, செல்வம், வி.சி.க. ஜெயக்குமார், திருமேனி, இளைய ராஜா, சிவசக்தி, கம்யூனிஸ்ட் தண்டபாணி, முருகையன், தவாக ஐயப்பன், வெங்கடேசன், முருகானந்தம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் அன்வர் ஒன்றிய கழக செயலாளர் ஆர்.நாராயணசாமி, பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன், நகர கழக செயலாளர் த.தமிழ்செல்வன், நகரமன்ற தலைவர் சு.சிவக்குமார்,பேரூராட்சி தலைவர் கோகிலா குமார், துணை தலைவர் ராமர் உள்ளிட்ட கழக மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்துக் கொண்டு கண்டன முழக்கமிட்டனர்.



வேலூர் தெற்கு மாவட்டம் அணைக்கட்டு பேருந்து நிலையம் அருகில் 100நாள் வேலை திட்டத்தை குழிதோண்டி புதைக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தெற்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்த குமார் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கண்டனப் பேருரை ஆற்றி கண்டன முழக்கங்கள் எழுப்பினர். இதில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு மத்திய ஒன்றிய செயலாளர் வெங்கடேசன், கிழக்கு ஒன்றியச் செயலாளர் கோ.குமரபாண்டியன், பேரூராட்சி செயலாளர்கள் ஜாகீர் உசேன் ,பெருமாள் ராஜா இந்திய கூட்டணி கட்சி மாவட்டச் செயலாளர்கள் மாநகர செயலாளர்கள் துணை செயலாளர்கள் உள் ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டத்தில் 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப்பெற வலியுறுத்தியும், ஒன்றிய பா.ஜ.க அரசையும், அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.கவைக் கண்டித்தும் பாப்பிரெட்டிப்பட்டி, கடத்தூர், தருமபுரி, காரிமங்கலம் மற்றும் பாலக்கோடு ஆகிய 5 ஒன்றியங்களில் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கு.தங்கராசு, பொன்.அய்யனார், வேலன், தமிழ்அன்வர், அதியமான், கமலா மூர்த்தி, மணி, முத்து, சுகவனம், குமரவேல், தவமணி, சக்திவேல், ராஜா, அஸ்லாம், முனியப்பன், சஜீர் ஆகியோர் கண்டன உரையாற்றினர். ரா. சித்தார்த்தன், சி.முத்துக்குமார், பி.எஸ்.சரவணன், கொ.ஜெயச்சந்திரன், கு.கௌதமன், M.மாரி மற்றும் கழக நிர்வாகிகள், மதச் சார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.




திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி ஒன்றியத்தில் 100நாள்வேலை திட்டத்தை குழி தோண்டி புதைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் அ.தி.மு.க.வைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் நடந்தது. உடன் ஊராட்சி குழுத்தலைவர் சூரிய குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




திருவண்ணாமலை ஒன்றிய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், 100 நாள் வேலை திட்டத்தில் மாற்றம் கொண்டு வந்த மோடி அரசைக் கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கண்டன உரையாற்றினார். உடன் சி.பி.எம். என்.பாண்டி, சி.மூர்த்தி, இரா.திருமலை, டாக்டர் என்.வெற்றிச்செல்வன், சி.நியூட்டன், ஐ.எம். சுலைமான், நாசர் உசேன், இரா.அருள், மல்லி வினோத், கேட் குமார், கோ.கண்ணன், எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன், மெய்யூர் ந.சந்திரன், த.ரமணன், சி.மாரிமுத்து, இல.பாசறை பாபு, விஜயலட்சுமி ரமேஷ், கா.கண்ணதாசன், ப.ராஜசேகர் உட்பட பலர் உள்ளனர்.




கடலூர் கிழக்கு மாவட்டம், மேல்புவனகிரியில் அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி, 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் பாசிச பா.ஜ.க. அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், மாவட்டக் கழக பொருளாளர் எம்.ஆர்.கே. பி.கதிரவன் தலைமையில் நடைப்பெற்றது. ஒன்றிய கழக செயலாளர் கள் ஏ.எஸ்.மதியழகன், ஏ.எம்.மதியழகன், வெற்றிவேல் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.